## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 29/2025**

**Prosecution Witness : P. W. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சாந்தி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 23/02/2026

A1 to A4 Present.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது அவுரிவாக்கத்தில் வசித்து மீன் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 23.05.2024 ம் தேதி மாலை 7 மணியளவில் மீன் களத்தில் சத்தமாக இருந்தது. நான் அந்த இடத்திற்கு சென்றேன். அப்போது தேசிங்கு என்பவரை விஜயன், விஜயகுமார், சங்கீதாஸ், புவனேஸ் ஆகியோர் அடித்துக் கொண்டிருந்தார்கள். நான் ஏன் அவரை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு என்னையும் அவர்கள் கட்டையால் தலையில் அடித்தார்கள். என் புடவையை கிழித்து கீழே தள்ளி அடித்ததால் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. அங்கிருந்த ராமு, கலைவாணன், இளவரசு ஆகியோர் என்னை பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தார்கள். என்னை அடித்த நபர்கள் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

ஊரில் வெகு நாட்களாக சண்டை இருந்து வருகிறது என்றால், நான் வீட்டில்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

இருக்கும் இல்லத்தரசி என்பதால் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து என்னை எப்போது உதவி ஆய்வாளர் விசாரித்தார் என்றால், 23.05.2024 ல் மீன் காய வைக்கும் இடமான சம்பவயிடத்தில் விசாரித்தார். 10 மணியளவில் விசாரித்திருப்பார்கள். ஊரில் இரண்டு பிரிவிற்கு இடையே பிரச்சனை இருப்பதாக விசாரணையில் சொன்னேனா என்றால், இல்லை. எப்போது மருத்துவமனைக்கு சென்றேன் என்றால், மேற்படி தேதியில் இரவு சென்றேன். நேரம் எனக்கு சரியாக தெரியவில்லை. மயக்கத்தில் இருந்தேன். மருத்துவமனைக்கு யார் என்னை அழைத்துச் சென்றார்கள் என்றால், ஊர்க்காரர்கள் தான் அழைத்துச் சென்றார்கள். என்ன காயம் ஏற்பட்டது என்றால், தலையில் காயம் ஏற்பட்டது. வேறு காயங்கள் இல்லை. எதற்காக பிரச்சனை ஏற்பட்டு என்னை தாக்கினார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். சாட்சி ராமு யார் என்றால், என் தம்பி ஆவார். அவரை தான் அடிக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு சம்பவயிடத்திற்கு நான் ஓடினேன். அசா.1 எங்கள் ஊர் சபாநாயகர் என்றால், தெரியாது. பிரபு யார் என்றால், ஊர் தலைவர் ஆவார். தேசிங்கு எங்கள் ஊரில் நிர்வாகத்தில் இருக்கிறார் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் பொய் என்றாலும், ஊர் சேர்ந்து தனிப்பட்ட நபரின் வீட்டை அபகரிக்க அவர் வீட்டை சுற்றி வேலி அமைத்து விட்டோம் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C. C. No. 29/2025**

**Prosecution Witness : P. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : தேசிங்கு | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 23/02/2026

A1 to A4 Present.

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

நான் தற்போது அவுரிவாக்கத்தில் வசித்து மீன்பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 03.05.2024ம் தேதி மாலை 7 மணியளவில் மீன் களத்தில் நான் இளவரசன், ராமு, கலைவாணன் ஆகியோர் அந்த இடத்தில் இருந்தோம். விஜயன் என்பவர் அங்கு அசிங்கமாக திட்டிக் கொண்டிருந்தார். விஜயன், விஜயகுமார், சங்கீதாஸ், புவனேஸ் அவருடன் இருந்தார்கள். நான் ஏன் அவ்வாறு திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு, கட்டையால் என்னை தலை மற்றும் உடம்பில் அடித்தார். அங்கிருந்த சாந்தி ஏன் அவரை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் நான்கு பேரும் சாந்தியை தலைமுடியை பிடித்து கீழே தள்ளி புடவையை இழுத்து அவரை அடித்தார்கள். என்னுடன் இருந்த 3 பேர் அவர்களை கேட்ட போது, அவர்களையும் அடித்து அசிங்கமாக திட்டினார்கள். பின்பு அவர்கள் அடித்ததில் எனக்கு சுயநினைவில்லை. என்னை பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தார்கள். இது சம்மந்தமாக ஊரில் உள்ளவர் எனக்கு புகார்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

எழுதிக் கொடுத்தார். நான் அதில் கைநாட்டு வைத்தேன். **புகார் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள கட்டைகள் தான் ஆஜர் எதிரிகள் என்னை தாக்கினார்கள். **அது சான்றுபொருள் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நான் அவுரிவாக்கத்தில் சபாநாயகராக இருக்கிறேன். சபாநாயகர் என்றால், தண்டோரா போட்டு ஊர் மக்களுக்கு தகவல் கொடுப்பது என் வேலையாகும். உதயகுமார் எங்கள் ஊர் நிர்வாகி என்றால் சரிதான். ஊர்காரர்கள் நிர்வாகத்தில் எடுக்கும் முடிவு தான் தண்டோரா போட்டு சொல்வேன் என்றால், சரிதான். என் வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றால், சரிதான். ஊரை 3ம் எதிரி சங்கிதாஸ் மதிக்கவில்லை என்றால், சரிதான். சம்பவயிடம் சங்கிதாஸ் வீட்டின் எதிரிலேயே களத்தில் நடந்தது என்றால் சரிதான். சம்பவயிடம் பொதுவான மீன் காய வைக்கும் இடம் என்றால் சரிதான். அதற்கு முன்பு அந்த வழியாக சங்கிதாஸுக்கு வழி இருந்தது என்றால், சரிதான். ஊருக்கு அவர் எதிராக இருந்ததால்அந்த வழியை ஊர்காரர்கள் அடைத்து விட்டார்கள் என்றால் சரிதான். பிரபு தான் ஊர் முக்கியஸ்தர் மற்றும் மீனவர் சங்க தலைவர் என்றால் சரிதான். ஊரை எதிர்த்ததால் சங்கிதாஸ் வழியை பயன்படுத்தக்கூடாது என்று கம்பி வேலி போட்டு அடைத்து விட்டார்கள் என்றால், சரிதான். அவர் சுற்றி தான் வர வேண்டும் என்றால், சரிதான். சங்கிதாஸின் வீட்டை சுற்றி முள்வேலி போட்டு அடைத்துவிட்டதால் அவர் வீட்டை விட்டு வர முடியாத சூழ்நிலையில் இருக்கிறார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக ஊர் கூட்டமும், 6 ஊர்கள் சேர்ந்து நடத்தியது என்றால், சரிதான். முதலில் பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். சங்கிதாஸ் பிரச்சனைக்காக மாவட்ட

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

ஆட்சியரை அணுகினார் என்றால் சரிதான். ஊரை மதிக்காததால் ஊர் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு அவருடன் யாரும் பேசக்கூடாது, தொழில் செய்யக்கூடாது போன்ற கட்டுப்பாடுகள் ஊரில் போட்டுவிட்டார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரி விஜயன் ஊர் நிர்வாகி என்றால் சரிதான். விஜயன் குழுவினர் சங்கிதாஸூக்கு ஆதரவாக இருந்ததால் அவர் மீதும் ஊர் கட்டுப்பாடு விதித்துள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு அந்த 6 ஊர்க்காரர்களும் எழுத்து மூலமாக அனுமதி அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். 6 ஊர்க்காரர்கள் சேர்ந்து வீட்டை அடைத்த வேலியை அப்புறப்படுத்தினார்கள் என்றால் சரிதான். எதிரிகள் தற்போது ஊரில் வசிக்கவில்லை என்றால் சரிதான். ஊர் சொல்லி தான் நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால், ஊர் நிர்வாகி முடிவெடுத்து புகார் கொடுத்தோம். அன்றைய தேதியில் நடைபெற்ற விசாரணையில் எதிரிகள் போலிசையும் ஊரையும் மதிக்கவில்லை என்றால், சரிதான். போலிசார் விசாரணை முடிந்து இரு தரப்பையும் உதவி ஆய்வாளர் பேசி அனுப்பிவிட்டார் என்றால் சரிதான். சங்கிதாஸ் எங்கள் ஊர் நிர்வாகம் மீது எதிராக ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஊர்க்காரர்கள் என்னை மருத்துவமனையில் சேர்த்துவிட்டார்கள் என்றால் சரிதான். மருத்துவர் எனக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தார் என்றால் சரிதான். அதை பெற்று நான் ஊர்க்காரர்களிடம் கொடுத்து அவர்கள் எதிரிகள் மீது புகார் நடவடிக்கை எடுக்க வைத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு சம்பவ தேதியில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், நான் ஊர்க்காரர்களுக்கு பரிந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரத்தகாயம் ஏற்பட்டது. நடு மண்டை, நடு முதுகில் காயம் ஏற்பட்டது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அரசியலமைப்புக்கு மீறி உள்ளூர் விதிகள் முரணாக விதித்து ஆட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA